தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விதைச்சான்று இணை இயக்குநர் திடீர் ஆய்வு

திருவள்ளூர், திருத்தணி, பள்ளிப்பட்டு ஆகிய வட்டங்களில் விதைச்சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி புதன்கிழமை திடீர் ஆய்வு செய்தார். திருவள்ளூர் மாவட்ட விதைச் சான்று இணை இயக்குநர் பழனிச்சாமி, ஆர்.கே.பேட்டையில் உள்ள விதை சுத்திகரிப்பு நிலையத்துக்கும் திடீரென சென்று ஆய்வு செய்தார். இதைத்தொடர்ந்து, திருத்தணியை அடுத்த தும்பிகுளம் கிராமத்தில் உள்ள உளுந்து, பச்சைப் பயறு விதைப் பண்ணைகளை ஆய்வு செய்தார். விதைப் பண்ணையில் பிற ரக கலவன்களை நீக்கி, நல்ல தரமான சான்று விதைகளை உற்பத்தி செய்ய விவசாயிகளுக்கு அறிவுரை வழங்கினார். தொடர்ந்து திருவள்ளூரில் உள்ள விதைப் பரிசோதனை நிலையத்திலும் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது வேளாண்மை துணை இயக்குநர் பாபு, விதைச்சான்று உதவி இயக்குநர் பிரதீப்குமார் சிங், வேளாண்மை உதவி இயக்குநர்கள் மொகமது ரபீக், பிரசாத் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர்.

### ஜன.28, 29 தேதிகளில் பயிர் பாதுகாப்பு விழிப்புணர்வு முகாம்

தருமபுரி மாவட்டம், பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில் பயிர் ரகங்கள் பாதுகாப்பு மற்றும் விவசாயிகளுக்கான உரிமைச் சட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் வருகிற ஜன.28, 29 ஆகிய தேதிகளில் நடைபெறுகிறது. இதுகுறித்து பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலைய ஒருங்கிணைப் பாளர் என்.தமிழ்செல்வன் வெளியிட்ட செய்திக்குறிப்பு: மத்திய அரசால் கொண்டு வரப்பட்ட பயிர் ரகங்கள் பாதுகாப்பு மற்றும் உரிமைச் சட்டம் விவசாயிகளிடம் சென்றடையவில்லை. இதுகுறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக நடைபெறும் முகாமில் விவசாயிகளின் சொந்த முயற்சியில் உருவான ரகங்களை விவாதித்து, காப்புரிமை பெறுவதற்காக பதிவு செய்ய

ஏற்பாடு செய்யப்படும். மேலும், காலங் காலமாக சாகுபடி செய்யப்படும் பயிர் ரகங்களின் விதைகள், பயிர்களை முகாமில் வைத்து மற்ற விவசாயிகள் பயன்பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது. இதில் பங்கேற்க விரும்பும் விவசாயிகள் வருகிற ஜன.27ஆம் தேதி மாலை 5 மணிக்குள் 04342-245860 என்ற தொலைபேசி எண்ணில் முன்பதிவு செய்ய வேண்டும் என்றார்.

## <u>செட்டிக்குளத்தில் 15 டன் சின்ன வெங்காயம் ரூ. 3.23 லட்சத்துக்கு ஏலம்</u>

பெரம்பலூர் மாவட்டம், ஆலத்தூர் வட்டம், செட்டிக்குளம் வெங்காய வணிக வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் 15 டன் சின்ன வெங்காயம் ரூ. 3.23 லட்சத்துக்கு விற்பனையானது. இங்கு, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத் துறை முலம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திறந்தமுறை ஏலத்தில் அடைக்கம்பட்டி, செட்டிக்குளம், நாட்டார் மங்கலம், கூத்தனூர், சிறுவயலூர், தேனூர், சத்திரமனை, பொம்மனப்பாடி, மாவலிங்கை, அடைக்கம்பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 48 விவசாயிகள் தங்களது சின்ன வெங்காயத்தை கொண்டு வந்து விற்பனை செய்தனர். இதில் பங்கேற்ற செட்டிக்குளம், பொம்மனப்பாடி, பாடாலூர், இரூர், சிறுவயலூர், தேனூர், நாகலாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 7 வியாபாரிகள், 232 மூட்டை (14,789 கிலோ) சின்ன வெங்காயத்தை அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 30.50-க்கும், விதை வெங்காயம் அதிகபட்சமாக 1 கிலோ ரூ. 35-க்கும், சராசரியாக 1 கிலோ ரூ. 22-க்கும் என ரூ. 3,23,353-க்கு வாங்கிச் சென்றனர்.

## <u>இயற்கை விவசாயிகள் மாநாடு பெங்களூருவில் தொடக்கம்</u>

பெங்களூருவில் இயற்கை விவசாயிகள் மாநாடு வியாழக்கிழமை (ஜன.22) தொடங்கி 3 நாள்கள் நடைபெறுகிறது. பெங்களூரு கனகபுரா சாலையில் உள்ள வாழும் கலை மைய மாநாட்டு அரங்கில் நடைபெறும் இந்த மாநாட்டை வாழும் மையத்தின் தலைவர் ஸ்ரீஸ்ரீ ரவி சங்கர் குருஜி தொடக்கிவைக்கிறார். மாநாட்டில் உரம் கலப்பில்லாத இயற்கை விவசாயம் குறித்து பல்வேறு

தலைப்புகளில் விவாதிக்கப்படும். மாநாட்டில் சர்வதேச அளவிலான அறிவியல், விவசாய நிபுணர்கள் பங்கேற்பார்கள் என மாநாட்டு ஏற்பாடுகள் குழு சார்பில் வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கத்தரி பயிரிட்டால் அதிக லாபம் பெறலாம்!



விவசாயிகள் தற்போதைய பருவத்துக்கு ஏற்ற தோட்டப் பயிரான கத்தரிக்காயை சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம் என வேளாண் துறையினர் யோசனை தெரிவித்தனர். இதற்கான வழிமுறைகளை அவர்கள் வெளியிட்டுள்ளனர். அதன் விவரம்: **பயிரிடும் காலம்**: நாள் தோறும் மக்களின் பயன்பாட்டில் அதிகம் உள்ள காய் கத்தரி. இதை டிசம்பர், ஜனவரி மாதத்தில் தொடங்கி மே வரை பயரிடலாம். **மண்ணின் தன்மை:** நல்ல வடிகால் வசதியுள்ள மணல் கலந்த வண்டல் மண் அல்லது களிமண் கலந்த வண்டல் மண் கத்தரி பயிரிட ஏற்றதாகும். விதை நேர்த்தி: ஒரு ஹெக்டேருக்கு 200 கிராம் வீதம் விதை நேர்த்தி செய்ய வேண்டும். டிரைகோடெர்மா விரிடி 4 கிராம் அல்லது சூடோமோனாஸ் புளோரசன்ஸ் 10 கிராம் வீதம் கலக்க வேண்டும். அசோல் பைரில்லம், பாஸ்போபேக்டீரியா ஒவ்வொன்றையும் 100 கிராம் வீதம் கலந்து நிழலில் அரைமணி நேரம் வைக்க வேண்டும். **இடைவெளி, செடி எண்ணிக்கை:** பொதுவாக கத்தரி ரகத்தின் தன்மையைப் பொறுத்து இடைவெளி, செடியின் எண்ணிக்கை மாறுபடும். மிதமான வளர்ச்சி உள்ள ரகங்களை 4 அடி அகலமுள்ள மேட்டுப் பாத்தியில் ரெட்டை வரிசை முறையில் 60 ல 60 சென்டி மீட்டர் இடைவெளியில் நட வேண்டும். அதிக வளர்ச்சியுள்ள ரகங்களை உயர் பாத்தியில் ஒரு வரிசையில் ஒரு செடிக்கும் மற்றொரு செடிக்கும் 45 சென்டி மீட்டர் இடைவெளியில் நட வேண்டும். **நடவு முறை :** நாற்றுக்களை நடுவதற்கு முன்பு 8 முதல் 12 மணி நேரம் உயர் பாத்திகளை சொட்டு நீர்ப் பாசனத்தைப் பயன்படுத்தி நன்கு நனைக்க வேண்டும். நாற்றுக் களை மேற் குறிப்பிட்ட இடைவெளியில் நட வேண்டும். நடவு செய்த ஒரு

வாரத்துக்குப் பின்பு இடைவெளி இருப்பின் அங்கு புதிய நாற்றுக்களை நடலாம். **நீர்ப் பாசனம், நீர்வழி உரமிடல்:** தினமும் சொட்டு நீர்ப் பசான முறையில் ஒரு மணி நேரம் தண்ணீர் பாய்ச்ச வேண்டும். தேவையான அளவு நீரில் கரையும் உரத்தை அட்டவணையில் குறிப்பிட்ட கால இடைவெளியில் சொட்டு நீர்ப் பாசனத்துடன் இணைக்கப்பட்டுள்ள உரத் தொட்டியின் மூலம் இட வேண்டும். **பின்னால் செய்ய வேண்டிய நேர்த்தி**: நடவு செய்த 30-வது, 60-வது நாளில் களை எடுத்து மண் அணைக்க வேண்டும். டிரையகாண்டனால் 125 மில்லி 30-வது நாளில் இருந்து 15 நாள் இடைவெளியில் மூன்று முறை தெளிக்கவும். பூப் பிடித்தலை அதிகரிக்க என்ஏஏ. 0.25 பிளோனோபிக்ஸ் என்ற அளவில் பூப் பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும். **அறுவடை, மகசூல்:** மேற்கண்ட முறைகளை விவசாயிகள் கையாண்டால் 50 முதல் 120 நாள்கள் வரை மகசூல் அறுவடை செய்யலாம். வீரீய ஒட்டு ரகத்தில் ஹெக்டேருக்கு 40 முதல் 50 டன்கள் வரை மகசூல் கிடைக்கும். கத்தரி அறுவடை ரகத்திற்கேற்ப நாள்கள் மாறுபடும் என்று வேளாண் துறையினர் கூறியுள்ளனர்.

**<u>காக்க...காக்க...நெல் பயிரைக் காக்க..</u>**



நவரைப் பருவத்தில் நடவு மேற்கொள்ளப்பட்ட நெல் பயிர்களை சுருட்டுப் புழுக்கள், குருத்துப்பூச்சிகள் அதிகம் தாக்கி சேதத்தை ஏற்படுத்த வாய்ப்பு உள்ளது. எனவே, இதிலிருந்து நெல் பயிர்களைக் காக்கும் தொழில்நுட்பங்களை விவசாயிகள் தெரிந்து கொள்ள வேண்டும். இதுகுறித்து காட்டுப்பாக்கம் வேளாண் நிலைய உதவிப் பேராசிரியர் முருகன் கூறியது: நவரைப் பருவத்தில் நடவு மேற்கொள்ளப்பட்ட நெல் பயிர்கள் இப்போது தூர் கட்டும் பருவத்தில் உள்ளது. இந்தப் பருவத்தில் உள்ள பயிர்களில் இலை சுருட்டுப் புழுத் தாக்குதல் ஆங்காங்கே காணப்படுகிறது. **சுருட்டுப் புழு தாக்குதலின் அறிகுறிகள்:** பச்சை அல்லது வெளிர் மஞ்சள் நிறப் புழுக்கள் நெல்லின் இலையை நீள வாட்டிலோ

அல்லது பக்கவாட்டிலோ மடித்துப் பின் உள்ளே இருந்து இலைகளின் பச்சையத்தை சுரண்டி உண்கின்றன. தாக்கப்பட்ட இலைகள் வெண்ணிறம் அடைந்து ஒளிச்சேர்க்கை குறைந்து வளர்ச்சி குன்றி விடுகிறது. **கட்டுப்படுத்தும் முறைகள்**: ஒரு ஏக்கருக்கு 5 விளக்குப் பொறி அமைத்து தாய் அந்துப் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். பரிந்துரைக்கப்பட்ட உர அளவை விட, அதிக தழைச்சத்து உரம் இடுவதை தவிர்க்க வேண்டும். இலைச் சுருட்டுப் புழுக்களின் முட்டைகளைத் தாக்கி அழிக்கின்ற டிரைக்கொகிரம்மா கைலோனிஸ் முட்டை ஒட்டுண்ணியை ஒரு ஏக்கருக்கு 40,000 (2சிசி) என்ற அளவில் நடவு நட்ட 37, 44 அல்லது 51 நாள்களில் வெளியிட வேண்டும். பூச்சிகளின் தாக்குதல் சேத அளவை அடையும்போது 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளித்து கட்டுப்படுத்தலாம். ரசாயனப் பூச்சிக் கொல்லி மருந்துகளான புரபனோபாஸ் 50 (இசி) 400 மி.லி. அல்லது கொராஜன் 60 மி.லி. என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். **குருத்துப்பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்**: நெல் தண்டுத்துளைப்பான் எனப்படும் இப் பூச்சியின் தாக்குதல் நாற்றாங்காலிலேயே தொடங்குகிறது. இளம் பயிர்களில் குருத்தை துளைத்து உண்பதால் நடுக்குருத்து வாடி கருகிவிடும். தாக்கப்பட்ட பயிரின் வளர்ச்சி குன்றி தூர்களின் எண்ணிக்கை குறைந்துவிடும். கதிர்ப் பிடிக்கும் தருணத்தில் இதன் தாக்குதல் இருந்தால், கதிர் மணிகள் பால் பிடிக்காமல் சாவியாகி வெண்கதிர்களாக மாறிவிடும். **கட்டுப்படுத்தும் முறைகள்:** நடுவதற்கு முன் நாற்றுகளின் நுனியைக் கிள்ளி முட்டைக் குவியல்களை அழிக்கலாம். டிரைக்கொகிரம்மா ஜப்பானிக்கம் என்ற முட்டை ஒட்டுண்ணியை ஒரு ஏக்கருக்கு 40,000 வீதம் (2சிசி) என்ற அளவில் நடவு நட்ட 30, 37 நாள்களில் வயல்களில் வெளியிட வேண்டும். ஒரு ஏக்கருக்கு 5 இனக்கவர்ச்சிப் பொறி வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். 5 சதவீதம் வேப்பங்கொட்டை கரைசல் தெளித்துக் கட்டுப்படுத்தலாம். பொருளாதார சேத நிலை அறிந்து புரபனோபாஸ் 50 (இசி) 400 மி.லி. அல்லது கொராஜன் 60 மி.லி. என்ற அளவில் தெளித்து கட்டுப்படுத்தலாம். எனவே விவசாயிகள் அவரவர் நெற்பயிர்களில் உள்ள

இலைச்சுருட்டுப் புழு, குருத்துப்பூச்சிகளைக் கட்டுப்படுத்த மேலே கொடுக்கப்பட்ட தொழில்நுட்ப முறைகளைக் கையாண்டு பூச்சிகளின் சேதத்தை கட்டுப்படுத்தி மகசூலை அதிகரிக்கலாம். மேலும் விவரங்களுக்கு காட்டுப் பாக்கம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை 044 - 2745 2371 என்ற தரைவழித் தொலைப்பேசி எண்ணில் தொடர்பு கொண்டு தெரிந்து கொள்ளலாம் என்றார் முருகன்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**ரூ.1.30 கோடி மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்**

பெருந்துறை : பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில், 1.30 கோடி ரூபாய் மதிப்பில், கொப்பரை தேங்காய் ஏலம் விடப்பட்டது. இங்கு வாரம் தோறும், புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. நேற்றைய ஏலத்துக்கு, பெருந்துறை மற்றும் சுற்றுப்பகுதி விவசாயிகள், 3,028 மூட்டைகளில், 1.37 லட்சம் கிலோ கொப்பரையை கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரம் கொப்பரை, குறைந்தபட்ச விலையாக கிலோ, 97.75 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 103.15 ரூபாய்க்கும் விற்பனையானது.இரண்டாம் தரம் கொப்பரை, குறைந்தபட்ச விலையாக கிலோ, 64.65 ரூபாய்க்கும், அதிகபட்சமாக, 96.30 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தமாக, 1.30 கோடி ரூபாய்க்கு ஏலம் நடந்ததாக, சங்க தலைவர் அருள்ஜோதி செல்வராஜ் தெரிவித்தார்.

**மஞ்சள் விலை குவிண்டாலுக்கு ரூ.300 உயர்வு**

ஈரோடு : ஈரோடு மாவட்டத்தில், மஞ்சள் விலை ஏற்ற, இறக்கம் நிலவுகிறது. ஒரே நாளில் குவிண்டாலுக்கு, 300 முதல் 400 ரூபாய் வரை, நேற்று உயர்ந்தது.

தமிழக அளவில், மஞ்சள் மார்க்கெட்டுக்கு பெயர் போன, ஈரோடு மாவட்டத்தில் கடந்த, 2010ம் ஆண்டுக்குப்பின், கடும் வீழ்ச்சியடைந்த மஞ்சள் விலை, பொங்கலுக்கு முன்பு வரை, குவிண்டால், 8,898 ரூபாய் வரை, அதிகபட்சமாக விற்பனையானது.ஈரோடு மாவட்டத்தில் நடக்கும் சந்தையில், விவசாயிகளிடம் மஞ்சளை பெறும் வியாபாரிகள், வெளி மாவட்டம், வடமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றனர்.தை மாதத்தில், மஞ்சள் வரத்து அதிகரிக்கும் என்பதால், ஸ்திரத்தன்மையற்ற நிலை உள்ளது. நேற்று, ஒரே நாளில் குவிண்டாலுக்கு, 300 முதல், 400 ரூபாய் வரை அதிகரித்தது. இதுகுறித்து, மார்க்கெட் கமிட்டி செயலாளர் முருகானந்தம் கூறியதாவது: பொங்கல் பண்டிகைக்கு முன்பு வரை, மூட்டைகள் வரத்து அதிகரித்ததோடு, நல்ல விலை கிடைத்தது.தற்போது விற்பனை மையத்துக்கு, 200 முதல், 300 வரை குறைவான மூட்டைகளே விற்பனைக்காக வருகின்றன. நேற்று முன்தினம், ஒழுங்முறை விற்பனைக்கூடத்தில், விரளி அதிகபட்சமாக, 7,829 ரூபாய் வரை விற்பனையானது. குறைந்தளவில், 85 மூட்டைகள் மட்டுமே வரத்தானது. ஆனால், நேற்று, 439 மூட்டைகள் வரத்தானதில், 311 மூட்டைகள் விற்பனையானது. விரளி குறைந்தபட்சம், 7,269 முதல் அதிகபட்சமாக, 8,170 ரூபாய் வரை விற்பனையானது. வெளிச்சந்தையில், 280 மூட்டைகள் வரத்தானதில், 63 மூட்டைகள் விற்றன. விரளி, அதிகபட்சமாக, 7,648 ரூபாய்க்கு விற்பனையானது. அதேபோன்று, ஈரோடு, கோபி சொசைட்டியிலும், விரளி முறையே, 7,899, 7,999 ரூபாய்க்கு விற்பனையானது.கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்பு வரை, 1,000 முதல், 2,000 மூட்டைகள் வரத்தான நிலையில், தற்போது, மஞ்சள் வரத்து மந்தமடைந்துள்ளது. அடுத்த வாரம் முதல், மூட்டைகள் வரத்து அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## குமரியில் கிராம்பு சீசன் தொடக்கம்



நாகர்கோவில்: குமரி வனப்பகுதியில் உள்ள தனியார் கிராம்பு தோட்டங்களில் கிராம்பு சீசன் தொடங்கியுள்ளது. குமரி வனப்பகுதிகளான மாறாமலை, இஞ்சிக்கடவு உள்ளிட்ட இடங்களில் 100க்கும் மேற்பட்ட தனியார் எஸ்டேட்கள் உள்ளன. இங்கு ரப்பர் மட்டுமின்றி நல்லமிளகு, கிராம்பு, ஏலம் மற்றும் ஜாதிக்காய் உள்ளிட்ட நறுமண பயிர்களும் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இதில் கிராம்பு சுமார் 3 ஆயிரம் ஹெக்டேரில் பயிரிடப்பட்டுள்ளது. தற்போது மாறாமலையில் கிராம்பு அதிகம் விளைந்துள்ளதால் அதனை அறுவடை செய்யும் பணி நடைபெற்று வருகிறது. காலையில் கிராம்பு கொத்துகளை பறித்து மாலையில் உதிர்த்து மலைக்கு கீழே கொண்டு வரப்படுகிறது. கிராம்புகளை உதிர்க்க இரவு 7 மணிக்கு மேல் ஆகிவிடுகிறது. வனத்துறை சட்டப்படி வனப்பொருட்களை மாலை 6 மணிக்கு மேல் வனப்பகுதியிலிருந்து கொண்டு செல்ல தடை உள்ளது. கிராம்பு உற்பத்தியாளர்கள் வனத்துறை உயர் அதிகாரிகளிடம் சிறப்பு அனுமதி பெற்றுள்ளதை அடுத்து இரவு 9.30 மணி வரை கிராம்புகளை வனப்பகுதியிலிருந்து வெளியே கொண்டு வர சிறப்பு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

**வேலூர் மாவட்டத்தில் 39 மகளிர் பண்ணை குழு அமைக்க ரூ.5.85 லட்சம் நிதி ஒதுக்கீடு வேளாண் அதிகாரிகள் தகவல்**

வேலூர், : வேலூர் மாவட்டத்தில் 39 மகளிர் பண்ணை குழு அமைக்க தமிழக அரசு ரூ.5.85 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக வேளாண் அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தியாவின் முதுகெலும்பு என்றால் அது வேளாண்மைதான். ஆனால் சில ஆண்டுகளாக வேளாண் உற்பத்தி குறைந்து கொண்டு வருகிறது. மத்திய, மாநில அரசுகள் வேளாண் உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்தியாவில் தட்ப வெப்பநிலை மாறி மாறி வருகிறது. மேலும் விவசாயத்திற்கு ஆட்கள் கிடைக்காத சூழ்நிலை நிலை நிலவிவருகிறது. இந்நிலையில் விவசாயத்தில் உற்பத்தியை அதிகரிக்க இந்தாண்டு தமிழக அரசு புதியதாக மகளிர் பண்ணை குழுக்களின் அமைக்க முடிவு செய்யப்பட்டது. இக்குழுக்களின் மூலம் விவசாயத்திற்கு தேவையான உரங்கள் மற்றும் பழச்செடிகள், மற்றும் விவசாயம் சார்ந்த தொழிலை மேற்கொள்ள உள்ளனர். தமிழகம் முழுவதும் 770 மகளிர் பண்ணை அமைக்கப்படவுள்ளது, இதற்காக தமிழக அரசு ரூ.113 கோடியே 26 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. அதன்படி வேலூர் மாவட்டத்திற்கு 39 பண்ணை குழு அமைக்க ரூ.5.85 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. வேளாண்துறை சார்பில் 27 பண்ணை குழுவும், தோட்டக்கலைத்துறை சார்பில் 12 பண்ணை குழுவும் அமைக்கப்படுகிறது. வேலூர் மாவட்டத்தில் உள்ள வட்டாரங்களில் உள்ள வேளாண் அதிகாரிகள் மூலம் மகளிர் பண்ணை குழுக்கள் தேர்வு செய்யப்படும். அக்குழுக்களுக்கு வேளாண்துறை புதிய தொழில்நுட்பத்தினை கையாளும் முறை, விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த பயிற்சி மற்றும் செயல்விளக்கம் குறித்த பயிற்சி வேளாண் அதிகாரிகளின் மூலம் வழங்கப்படவுள்ளது. இந்த குழுக்களுக்கு பயிற்சியளிக்க ரூ.1.95 லட்சமும், குழுக்களுக்கு சுழல் நிதியாக ரூ.3.90 லட்சம் வழங்குவதற்கான பணியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

## காட்டுமன்னார்கோவிலில் மிளகாய் சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம்

காட்டுமன்னார்கோவில், :காட்டுமன்னார்கோவிலில் பெரும்பாலானோர் விவசாயிகள். இங்கு நெற்பயிர் சாகுபடியை தவிர்த்து மணிலா, மிளகாய், மலர் செடிகள் அதிகம் பேர் சாகுபடி செய்கின்றனர். நஞ்சை, புஞ்சை, கொள்ளிட படுகைகளில் மிளகாய் சாகுபடி செய்கின்றனர். அன்றாட சமையலுக்கு மிளகாய் வற்றல் மற்றும் பச்சை மிளகாய் அதிகம் பயன்படுத்தப்படுகிறது. தமிழகத்தில் காரம் அதிகம் பயன்படுத்தப்படுவதால் வற்றல் மிளகாய்க்கு கடும் கிராக்கி ஏற்படுவது வழக்கம். இதை கருத்தில் கொண்டே ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட சில பகுதிகளில் விவசாயிகள் மிளகாய் சாகுபடி செய்வதற்காக மிளகாய் நாற்று விடும் பணியில் ஈடுபட்டனர். தற்போது நாற்று விடப்பட்டு நன்றாக வளர்ந்த நிலையில் உள்ளது. குறிப்பிட்ட கால இடைவெளியில் நாற்று பறிக்கப்பட்டு சமப்படுத்தப்பட்ட பரப்பில் பாத்திகள் அமைத்து குறிப்பிட்ட இடைவெளியில் நடவு செய்யப்படும். தொடர்ந்து பராமரிக்கப்பட்டு அறுவடை செய்யப்படும். இவ்வாறு குறைந்த செலவில் அதிகம் லாபம் தரும் மிளகாய் சாகுபடி செய்ய இந்த பகுதி விவசாயிகள் தயார் நிலையில் உள்ளனர்.

## பிரதான கால்வாயில் தண்ணீர் திறப்பு

உடுமலை, : அமரா வதி அணையில் இருந்து பழைய,புதிய பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு மேலும் ஒரு மாதம் நீடிக்கப்பட்டுள்ளது. இதனால் திருப்பூர், கரூர் மாவட்டங்களில் 47 ஆயிரத்துக்கும் அதிகமான ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். உடுமலை அருகே உள்ள அமராவதி அணையின் மூலம் திருப்பூர்,கரூர் மாவட்டங்களில் 54 ஆயிரம் ஏக்கர் நிலம், கல்லாபுரம், ராமகுளம் வாய்க்கால்கள் மூலம் 3500 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. இந்த ஆண்டு பருவமழை போதிய அளவு பெய்ததால் அணையில் நீர்மட்டம் உயர்ந்தது. அதைத்தொடர்ந்து கடந்த செப்டம்பர் மாதம் 22ம் தேதி அணையில் இருந்து பழைய, புதிய ஆயக்கட்டு பகுதிகளுக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. ஒன்றரை ஆண்டுகளுக்குப்பிறகு விவசாயி கள் நெல் சாகுபடி செய்தனர்.

தற்போது முதல்போக சாகுபடி முடிந்துள்ளது. இந்த பாசன காலம் கடந்த 19ம் தேதியுடன் முடிந்தது. இந்நிலையில் திருப்பூர், தாராபுரம்,கரூர் பகுதிகளில் உள்ள பயிர்களை காக்கும் வகையில் ஆற்றிலும்,பிரதான கால்வாயிலும் தண்ணீர் திறப்பை நீட்டித்து அரசு உத்தரவு பிறப்பித்தது. அதன்படி நேற்று(20ம் தேதி) தண்ணீர் திறக்கப்பட்டது. பழைய ஆயக்கட்டு பகுதிக்கு மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ், புதிய ஆயக்கட்டுக்கு எம்எல்ஏ சண்முகவேலு பொத்தானை அழுத்தி தண்ணீர் திறந்து விட்டனர். பழைய ஆயக்கட்டு பகுதியான தாராபுரம் தாலுகாவில் உள்ள அலங்கியம், தளவாய்பட்டணம், தாராபுரம்,கொளிஞ்சிவாடி ஆகிய பகுதிகளில் உள்ள 8416 ஏக்கர் நிலமும், கரூர் மாவட்டத்தில் சின்னதாராபுரம், நஞ்சகாளக்குறிச்சி, வலது, இடதுகரை வாய்க்கால் பகுதிகளில் உள்ள 13450 ஏக்கர் நிலமும், புதிய ஆயக்கட்டில் மடத்துக்குளம், உடுமலை, தாராபுரம் தாலுகாவில் 25250 ஏக்கர் நிலமும் என மொத்தம் 47116 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். அடுத்த (பிப்ரவரி) மாதம் 20ம் தேதி முடிய 32 நாட்களுக்கு மொத்தம் 2013 மில்லியன் கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டுமென விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 90 அடி நீர்மட்டம் கொண்ட அணையில் தற்போது தண்ணீர் 65.62 அடி உள்ளது. வரத்து வினாடிக்கு 32கனஅடி.

**<u>அதிக மகசூல் கிடைக்கும் ஜனவரி-பிப்ரவரி மாத பட்டத்தில் உளுந்து சாகுபடி தொழில் நுட்பங்கள்வேளாண் அதிகாரி வழிகாட்டல்</u>**

சேதுபாவாசத்திரம், : உளுந்து சாகுபடியில் அதிக மகசூல் பெற மேற்கொள்ள வேண்டிய சாகுபடி தொழில் நுட்பங்கள் குறித்து வேளாண் அதிகாரி விளக்கமளித்துள்ளார். இது குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண் மை உதவி இயக்குநர் பெரிய சாமி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியுள்ளதாவது: நெல் தரிசு நிலத்தில் உளுந்து பயிர் சாகுபடி செய்ய ஜனவரி மாதம் பிப்ர வரி- மார்ச் மாதங்கள் சாகு படிக்கு ஏற்ற தருண மாகும். இதற்கு ஏற்ற ரகம் ஆடுதுறை 5. விதைப்பு செய்வதற்கு முன்பாக விதை மூலம்

பரவக்கூடிய வேர முகல், வாடல் நோய்களை கட்டுப்படுத்துவதற்கு 1 கிலோ விதைக்கு டிரைகோடெர்மா விரிடி என்ற எதிர் உயிர் பூசானம் 4 கிராம் அல் லது சூடோ மோனாஸ் 10 கிராம் அ ல்லது கார்பன்டா சிம் 2 கிராம் என்ற அளவில் பயன்படுத்தி விதை நேர்த்தி செய்து பிறகு பயறு வகை பயிர்களுக்குரிய ரைசோ பியம் என்ற நுண்ணுயிர் உரத்தை 200 கிராமும், அத்துடன் அசோஸ்பைரில்லம் 200 கிராம் என்ற உயிர் உரம் சேர்த்து 160 மில்லி ஆறிய அரிசி கஞ்சியு டன் ஒரு ஏக்கருக்கு தேவை யான விதை யுடன் கலந்து 1 நாள் முழு வதும் நிழலில் உலர்த்தி பின்னர் உயிர் உர நேர்த்தி செய்த விதைகளை 24 மணி நேரத்திற்கு பின் விதைப்பு செய்ய வேண்டும். இவ்வாறு விதைப்பு செய்யும்போது காற்றில் உள்ள தழைச்சத்தை கிரகித்து வேர் முடிச்சுகளில் சேமித்து வைத்துக் கொண்டு பயிர் வளர்ச்சிக்கு உதவுவதால் தழைச்சத்து இடுவதை குறைத்து கொள் ளலாம். இதனால் சாகுபடி செலவு குறைகிறது. தரிசு நிலத்தில் விதைப்பு செய்ய ஏக்கருக்கு 8 கிலோ விதை போது மானது. அதேசமயம் நஞ்சை தரிசில் விதைப்பு செய்யும்போது 1 ஏக்கருக்கு 10 கிலோ விதை போது மானது. இதை அறுவடை செய்வதற்கு 8 முதல் 10 நாட்களுக்கு முன்பாக விதை நேர்த்தி செய்து விதைகளை தூவ வேண்டும். விதைகளை தூவும்போது லேசான ஈரப்பதம் இருக்க வேண்டும். அப்போதுதான் அனைத்து விதைகளும் முளைக்கும். இவ்வாறு தொழில் நுட்பங்களை கடைப்பிடிக்கும் போது ஹெக்டேருக்கு 630 கிலோ வரை மகசூல் பெறலாம். பயறு வகை பயிர்களில் உற்பத்தியையும் சாகுபடி பரப்பையும் அதிகப்படுத்துவதற்காக தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மானிய விலை யில் சான்று பெற்ற உளுந்து விதையும் டி.ஏ.பி உரமும் விநியோகிக்கப்பட்டு வரு கிறது. தேசிய உணவு பாது காப்பு திட்டத்தின் கீழ் நீர் கொண்டு செல்லும் குழாய் கள் ரூ. 15 ஆயிரம் மானியத்திலும் தெளிப்பு நீர்பா சன கருவிகள் 7,500 ரூபாய் மானியத்திலும் மழைத்தூவிகள் ரூ. 15 ஆயிரம் மானியத்திலும் வழங்கப் படுகிறது. விவசாயிகள் இவற்றைப் பெற்று பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இவ்வாறு அவர் அந்த செய்திக் குறிப்பில் கூறியுள்ளார்.

## இன்றைய வேளாண் செய்திகள்

## 100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை குட்டைகள் இலவசமாக அமைத்து கொடுக்கப்படும்



100 நாள் வேலைவாய்ப்பு திட்டம் மூலம் விவசாயிகளுக்கு பண்ணை குட்டைகள் இலவசமாக அமைத்து கொடுக்கப்படும் என்று வேளாண்மை அதிகாரிகள்தெரிவித்துஉள்ளனர்.

1.76லட்சம்எக்டேர்

கோவை மாவட்டத்தில் மொத்தம் 1 லட்சத்து 76 ஆயிரம் எக்டேர் பரப்பளவு விவசாய நிலம் உள்ளது. இதில் 90 ஆயிரம் எக்டேரில் நெல், தக் காளி, வாழை, கரும்பு போன்றவையும், 40 ஆயிரம் எக்டேரில் மா, நெல்லி, முருங்கை, கறிவேப்பிலை போன்றவையும், மீதமுள்ள பரப்பளவில் தென்னைகளும் சாகுபடி செய்யப்பட்டு உள்ளன. பராமரிப்பு செலவு மிகவும் குறைவு என்பதால் தென்னை சாகுபடியில் விவசாயிகள் அதிகளவில் ஆர்வம் காட்டி வருகிறார்கள். தமிழகத்திலேயே கோவை மாவட்டத்தில் தான் சுமார் 2½ கோடி தென்னை மரங்கள் உள்ளன. கடந்த சில ஆண்டாக பருவமழை பொய்த்ததால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்தது. இதனால் தென்னை மரங்கள் காய்ந்ததால் விவசாயிகளுக்குபாதிப்புஏற்பட்டது.

நிலத்தடிநீர்மட்டம்உயர்வு

எனவே மழை பெய்யும்போது, தண்ணீரை தேக்கி வைக்கும் வகையில் மாவட்டம் முழுவதும் வேளாண்மைதுறை சார்பில் ஏராளமான பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டன. கடந்த 2 மாதங்களுக்கு முன்பு பெய்த மழையால்

இந்த குட்டைகள் நிரம்பின. இதனால் கோவை மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டம் கணிசமாக உயர்ந்து உள்ளது. எனவே இன்னும் அதிகமாக பண்ணை குட்டைகள் அமைக்க முடிவு செய்யப்பட்டு உள்ளது. இதற்காக 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தை பயன்படுத்தி வருவதால், விவசாயிகளுக்கு இலவசமாக பண்ணை குட்டைகள் அமைத்து கொடுக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டு உள்ளது. இதுகுறித்து வேளாண்மை அதிகாரிகள் கூறியதாவது:-

1300பண்ணைகுட்டைகள்

வேளாண்மை துறை சார்பில் கோவை மாவட்டத்தில் 1300 பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு உள்ளன. விவசாய தோட்டத்தில் 1½ மீட்டர் ஆழத்துக்கு அமைக்கப்படும் பண்ணை குட்டைக்கு 30 சென்ட் நிலம் இருந்தால் போதும். அதில் தாராளமாக அமைத்து விடலாம். மழை பெய்யும்போது பண்ணை குட்டை நிரம்புவதால் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்து, தோட்டத்துக்கு தாராளமாக தண்ணீர் கிடைக்கும். தற்போது பண்ணை குட்டைகள் 100 நாள் வேலைவாய்ப்பு திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு இலவசமாக அமைத்து கொடுக்கப்படுகிறது. இதற்கு சொந்தமாக நிலம் இருந்தால் போதும். எனவே தங்களது தோட்டத்தில் பண்ணை குட்டை அமைக்க விரும்பும் விவசாயிகள், தங்களுடைய நிலத்துக்கான ஆதாரத்துடன் வேளாண்மை அதிகாரிகளை தொடர்பு கொண்டு விண்ணப்பித்து பயன்பெறலாம். இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.

## <u>நீர்வளத்தை பாதுகாக்க அதிக அளவில் மரக்கன்றுகளை நடவேண்டும் கலெக்டர் வேண்டுகோள்</u>

நீர்வளத்தை பாதுகாக்க அதிக அளவில் மரக்கன்றுகளை நட வேண்டும் என்று கலெக்டர்வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கருத்தரங்கம்

திருவள்ளூரில் நீர்வள நதிமேம்பாடு, கங்கை புனரமைப்பு அமைச்சகத்தின் சார்பிலும் மாவட்ட கலெக்டரை தலைமையாக கொண்டு அமைக்கப்பட்டுள்ள மாவட்ட நீர்மேலாண்மை குழு சார்பிலும், நீர் மேலாண்மை பற்றிய ஒரு நாள்

கருத்தரங்கம் நடைபெற்றது. நிகழ்ச்சியில் திருவள்ளூர் மாவட்ட கலெக்டர் கொ.வீரராகவராவ் தலைமை தாங்கி குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார். அப்போதுஅவர்கூறியதாவது:-

திருவள்ளூர் மாவட்டத்தில் கிடைக்கும் நீர் ஆதாரங்கள் பெரும்பாலும் குடிநீர், இதர பயன்பாட்டு மற்றும் மேலாளண்மை பாசனத்திற்கும் பயன்படுகிறது. தமிழகத்தின் மேற்பரப்பு நீர் பொதுப்பணித்துறையின் நீர்ஆதாரப்பிரிவால் மேலாண்மை செய்யப்பட்டு வருகிறது. தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், மாவட்டத்தில் உள்ள முக்கிய நகரங்களான திருவள்ளூர், திருத்தணி, பூந்தமல்லி, ஊத்துக்கோட்டை ஆகியவற்றிற்கு ஒருங்கிணைந்த கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்து வருகிறது.

மரக்கன்றுகள்

மேற்பரப்பு நீருடன் நிலத்தடி நீரும், குடிநீர் வினியோகத்திற்கான முக்கிய ஆதாரமாக விளங்குகின்றது. நிலத்தடி நீரை தொடர்ந்து எடுப்பதால் தாழ்ந்து கொண்டு போகக்கூடிய சூழல் ஏற்படுகிறது. எனவே நீரை சிக்கனமாக பயன்படுத்த இது போன்ற கருத்தரங்குகள் பெரிதும் உதவுகிறது. பொது மக்களாகிய நாம் ஒவ்வொருவரும் நமக்கு கிடைத்த நீர் வளத்தினை நம் எதிர்கால சந்ததியினருக்கும் கிடைக்கும் வகையில் பாதுகாக்க அதிகமாக மரக்கன்றுகளை நட்டு பாதுகாக்க வேண்டும். நீர் வள ஆதாரங்களை பாதுகாக்க ஒவ்வொருவரும் பொறுப்பேற்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது அவருடன் குசஸ்தலை ஆறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் அசோகன், உதவி செயற்பொறியாளர் அரசு, கேர் எர்த் அமைப்பை சேர்ந்த ஜெயஸ்ரீ, திட்ட ஒருங்கிணைப்பாளர் முனியப்பன், விவசாயிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.